MCOP.No. 83/2022
Date : 14.08.2025
Witness Name & Rank – நந்தக்கோபால் - PW1

**சாட்சி அழைக்கப்பட்டு 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

1. எனக்கு விவசாய பூமி உள்ளதை காட்ட எந்த விதமான ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் விபத்து சமயத்தில் விவசாயம் பார்த்து வந்ததாகவும் அதில் மாதம் 40,000 சம்பாதித்து வந்ததையும் எடுத்துரைக்க எந்த விதமான ஆவணமும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். நான் மேற்படி விபத்து சமயத்தில் எனது கவனக்குறைவாலும் எனது அதிவேகத்தாலும் சென்று ஒன்றாவது எதிர்மனுதாரால் ஓட்டப்பட்ட வாகனத்தில் மோதி நான் தான் விபத்து ஏற்படுத்தினேன் எனவே ஒன்றாவது எதிர்மனுதாரருக்கு எதிராக இந்த இழப்பீடு மனுவானது தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. எனக்கு உரிய மருத்துவ காப்பீடு உள்ளதா என்றால் இல்லை. விபத்து சமயத்தில் எனக்கு மருத்துவ காப்பீடு இருந்தது என்றால் இல்லை. நான் சொல்வது தவறு என்றும் எனக்கு விபத்து சமயத்தில் மருத்துவ காப்பீடு இருந்து மருத்துவ காப்பீடு பெறப்பட்டு உள்ளேன் என்றும் எனவே தான் எனக்கு ஏற்பட்ட மருத்துவச் செலவுகளில் அசல் பில்களை தாக்கல் செய்யாமல் வெறும் நகலை நான் தற்போது தாக்கல் செய்து உள்ளேன் என்றால் சரியல்ல.
2. போலீசாருக்கு விபத்து ஏற்பட்ட உடன் தகவல் தெரிவிக்கப்பட்டது என்றால் சரிதான். இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள முதல் தகவல் அறிக்கை தவறான படி தாக்கல் செய்து பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இழப்பீடு பெற வேண்டி தவறான சங்கதிகளை முன்னிறுத்தி புகார் கொடுத்து அதன் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனக்கு விபத்து சமயத்தில் இரு சக்கர வாகனம் ஓட்ட உரிய ஓட்டுனர் உரிமம் இல்லை என்றால் சரியல்ல என்னிடம் உள்ளது நான் தாக்கல் செய்துள்ள எனது வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை ம.சா.ஆ. 7 ன் படி எனது இருசக்கர வாகன ஓட்டுனர் உரிமமானது 17.8.2017 ஆம் தேதி காலாவதி ஆகிவிட்டது என்றால் சரியல்ல. நான் எனது இருசக்கர வாகனத்தில் சென்றபோது எனது வாகனத்தின் டயர் வெடித்ததால் தான் எதிரில் சென்ற வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. மருத்துவ பில்கள்

அனைத்தும் நகல் என்பதால் அவை ஏற்றுக் கொள்ளக் கூடியது அல்ல அதன் அடிப்படையில் இழப்பீடு கோர முடியாது என்றால் சரியல்ல. எனக்கு குடும்ப அட்டை உள்ளது என்றால் சரிதான்.

3. மேற்படி குடும்ப அட்டையின் படி ரேஷன் விநியோகப் பொருட்களை வாங்கி வருகிறேன் என்றால் சரிதான்மாதம் ரூபாய் 40,000/- வாங்கும் நபர்களுக்கு ரேசனில் கொடுமைப் பொருள்கள் வழங்கப்படுவது அல்ல எனவே நான் எனது வருமானத்தை இழப்பீடுக்காக மிகப் படுத்தி கூறியுள்ளேன் அதன் அடிப்படையிலேயே வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் நல்ல உடல் ஆரோக்கியத்துடன் இருந்ததை காட்ட எந்த விதமான ஆவணமும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் நல்ல நிலையில் தான் இருந்தேன். இந்த வழக்கில் இழப்பீடு வழங்க தேவை ஏற்படும் பட்சத்தில் இரண்டாவது எதிர்மனுதாரர் தான் இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல. ஒன்றாவது எதிர்மனுதாரர் உரிய சாலை விதிகளுக்கு கட்டுப்பட்டு வாகனத்தை இயக்கியதால் எனது கவனகுறைவால் மேற்கூரிய விபத்து நடந்துள்ளதால் ஒன்றாவது எதிர்மனுதாரருக்கு எதிராக இந்த இழப்பீடு வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

4. மேற்படி எனது உடல் ஊனத்தை காட்ட நான் மருத்துவ பரிசீலனைக்கு செல்லவில்லை என்றால் இல்லை மனு இந்த நீதிமன்றத்தில் கொடுத்து இன்னும் மருத்துவமனையில் இருந்து அழைப்பானை பெறப்படவில்லை. தற்போது மேற்படி அளவீடு செய்ய முடியாத நிலையில் நான் கோரியுள்ள இழப்பீடு மிகைப்படுத்தி சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி வாகனத்திற்கு விபத்திற்கு காரணம் ஒன்றாவது எதிர்மனுதாரர் தான் என காட்ட எந்த விதமான ஆவணமும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல எனது மனுவானது ஒன்றாம் எதிர்மனுதாரருக்கு எதிராக தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

சாட்சி கூறிய படி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சிடப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது

(SD/-)K.Yuvaraj,B.A.,B.L.,
சார்பு நீதிபதி, பல்லடம்.